**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 55** **நாள்: 24.01.2026**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, திரு.வி.க. நகர் மற்றும் இராயபுரம் மண்லங்களில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகளை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவருமான அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இன்று (24.01.2026) திரு.வி.க. நகர் மற்றும் இராயபுரம் மண்லங்களில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவருமான அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதி, புளியந்தோப்பு, டாக்டர் அம்பேத்கர் சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சி.எம்.டி.ஏ. சார்பில் ரூபாய் 55 கோடி மதிப்பீட்டில் நவீன முறையில் புதியதாக கட்டப்பட்டு வரும் ஆடுதொட்டி புச்சர் கிரவுண்ட் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரரை அறிவுறுத்தினார்.

பின்னர், இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட, மூலக்கொத்தளம் மயானபூமியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளையும் இம்மயானத்தில் அமையப் பெற்றுள்ள மொழிப்போர் தியாகி தாளமுத்து நடராசன் மணி மண்டபத்தையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதனைத் தொடர்ந்து, பிராட்வே, பிரகாசம் சாலை, CSI பிஷப் கோரி ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமினைப் பார்வையிட்டு, 6 மாற்றுத்திறனாளிகளுக்கு பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலி வண்டிகளையும், 25 மாற்றுத் திறனாளிகளுக்கு தையல் இயந்திரங்களும், தொழிலாளர் நலத் துறையின் சார்பில் ஜிக் இணையதளப் பணியாளருக்கு ரூபாய் 20 ஆயிரம் மதிப்பிலான பேட்டரியால் இயங்கும் இருசக்கர வாகனத்தையும், 6 தொழிலாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியத்திற்கான ஆணைகளையும் மற்றும் 3 நபர்களுக்கு தொழிலாளர் நல வாரியத்தின் உறுப்பினர் பதிவு அட்டைகளையும் வழங்கினார்.

பின்னர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வருகின்ற 29.01.2026 அன்று பிராட்வே பேருந்து நிலையத்தில் பல்நோக்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து பேருந்து முனையம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டப்படவுள்ளதை முன்னிட்டு மேற்கொள்ளப்படும் முன்னேற்பாடுப் பணிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இன்று (24.01.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த ஆய்வுகளின் போது, மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.தாயகம் கவி (திரு.வி.க.நகர்), திரு.ஐட்ரீம்ஆர்.மூர்த்தி (இராயபுரம்), திரு.ஆர்.டி.சேகர் (பெரம்பூர்), மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., துணை ஆணையாளர்கள் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., (மத்திய வட்டாரம்), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு வட்டாரம்), மண்டலக் குழுத்தலைவர்கள் திருமதி சரிதா மகேஷ்குமார் (திரு.வி.க.நகர்), திரு.பி.ஸ்ரீராமுலு (இராயபுரம்), நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி பா.வேளாங்கண்ணி, திரு.வெ.பரிமளம் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு** : **இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**